Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 28 ஆம் நாள் முஹர்ரம் 28 (10-6-64) புதன்கிழமை இதழ் 122

அங்கீகாரப்படி
தேசிய லொத்தர் (சுவீப்)
ஏக விநியோகஸ்தர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சில்லறை வியாபாரத்திற்கு ஆள் தேவை
ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும்

கூட்டரசாங்கம் பற்றி

# பேச்சு நடத்த தயார்

## பிரதமருக்கு 58 எம்.பி.க்கள் ஆதரவு

கொழும்பு, செவ்வாய்

கூட்டு அரசாங்கம்பற்றி நாளைய மந்திரிசபை கூடி ஆராயவிருக்கிறது. இக் கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

லங்கா சமசமாஜக்கட்சியுடன் கூட்டு அரசாங்கம் அமைப்பதை ஆதரித்தும் பிரதமருக்கு ஒத்துழைப்பளிப்பதாக உறுதியளித்தும் அரசாங்கக் கட்சியைச்சேர்ந்த 58 எம். பி. க்கள் கையொப்பமிட்ட ஒரு மகஜரை பெந்தார எல்பிட்டிய எம். பி. திரு. அல்பர்ட் காரியவாசம் நேற்றுப் பிரதமரிடம் கையளித்தார்.

**சி. பி. டி' சில்வா தலைமையில் புதிய கட்சி**

லங்கா சமசமாஜக்கட்சியுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் அதை எதிர்த்து சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறுவதற்குத் தயாராக இருப்பதாகவும் திரு. சி. பி. டி' சில்வா அமைக்கும் புதிய கட்சியில் சேர விரும்புவதாகவும் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த 19 எம். பி.க்கள் திரு. சில்வாவிடம் தெரிவித்துள்ளனர். சுதந்திரக்கட்சி எம். பி. க்கள் சிலர் இன்று காலை திரு. சி பி.டி'சில்வாவை அவரது இல்லத்தில் சந்தித்து புதிய கட்சியமைப்பதுபற்றி ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

புதிய அரசியல் கட்சியை ஆரம்பிப்பதில் திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா, திரு. அசோகா கருணரத்தின ஆகியோர் தீவிர முயற்சி செய்வதாகவும் நாளைய மந்திரிசபைக் கூட்டத்தின்பின் திரு. சி. பி. டி' சில்வாவை திரு. ஆர். ஜீ. சேனநாயக்காவும் திரு. அசோகா கருணரத்தினவும் சந்தித்துப் பேசுவார்களென்றும் தெரியவருகிறது. சமசமாஜக் கட்சியுடன் சுதந்திரக்கட்சி சேர்ந்து கூட்டரசாங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு என்.எம். கடிதம்
## ஸி. பி. டி' சில்வாவுடன் எம். பி.க்கள் சந்திப்பு
### பிரதமரின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது

கொழும்பு, செவ்வாய்

கூட்டரசாங்கம் அமைப்பது பற்றி பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதென கடந்த சனிக்கிழமை நடைபெற்ற லங்கா சமசமாஜக்கட்சி மகாநாடு முடிவு செய்திருப்பதாக டாக்டர் என். எம். பெரேரா பிரதமருக்கு தான் எழுதியுள்ள முதல் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் இது பற்றி சமசமாஜக்கட்சியுடன் நாளை பேச்சுவார்த்தை நடத்துவார் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

நாளை பிரதமர் தமது மந்திரிகளிடம் தற்போதைய அரசியல் நிலைமைபற்றி விளக்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் கூட்டு அரசாங்கத்தை எதிர்க்கும் எம். பி.க்கள் திரு. ஸி. பி. டி'சில்வாவை அவரது இல்லத்தில் சந்தித்தனர். பிரதமரிடமிருந்து அரசியல் நிலைமைபற்றிய கடைசி முடிவை அறிவிக்குமாறு கோரும்படி அவர்கள் திரு. சில்வாவைக் கேட்டுக்கொண்டனர்.

டாக்டர் என். எம். கோஷ்டியினர் 3 மந்திரிப் பதவிகள் கோரியிருப்பது மந்திரிகளிடையே கஷ்டங்களைத் தோற்றுவித்திருப்பதாக நிச்சயமாக நம்பப்படுகிறது. முக்கிய மந்திரி பதவிகளை சமசமாஜிகளிடம் அளிப்பதற்குச் சில மந்திரிகள் எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது. பிரதம மந்திரியும்கூட என். எம்.மின் கோரிக்கை பற்றி இரட்டை மனம் படைத்திருப்பதாக ஒரு வட்டாரம் கூறுகிறது. நாளை மந்திரி சபைக் கூட்டத்திற்குப் பின்பே பிரதமர் மூன்று மந்திரி பதவிகள் அளிப்பது பற்றி முடிவு செய்வார் எனத்தெரிகிறது.

### மந்திரிசபை கூட்டத்திலிருந்து சி. பி. டி' வெளியேறுவார்?

கொழும்பு, புதன்

இன்று நடைபெறவிருக்கும் மந்திரிசபைக் கூட்டத்தில் கூட்டரசாங்கம் பற்றிய தமது கருத்தைவெளியிட்ட பின்னர் காணி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா கூட்டத்தை விட்டு வெளியேறுவார் என அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. எவ்வித கூட்டரசாங்கத்தையும் எதிர்க்கும் 13 எம். பி.க்கள் கையெழுத்திட்ட மகஜரும் பிரதமரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

### மாணவிகள் இரத்ததானம்

நல்லூர், புதன்

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையில் முக்கிய இடம் பெற்றுள்ள இரத்த வங்கியில் நேற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகள் இரத்தானம் செய்து அனைவரினதும் பாராட்டைப் பெற்றனர். ஏனைய ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இதனைப்பின் பற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவர்கள் இரத்த தானம் செய்யவிருக்கின்றனர்.

### ஜூலை 3-ல் பிரதமர் லண்டன் செல்வார்

கொழும்பு, செவ்வாய்

ஜூலை மாதம் 10-ந் திகதி லண்டனில் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் திருமதி சிறிமா ஜூலை 3-ந திகதி லண்டனுக்குப் பிரயாணமாவார் என அறியப்படுகிறது.

## லண்டன் ரயிலில் சேஷ்டை செய்த இலங்கையர்!
### முடிக்குரிய செலவு செலுத்தி நிபந்தனையுடன் மன்னிப்புப் பெற்றார்

லண்டன், ஜூன் 9

பேர்ஸி அருளையா என்ற 31 வயதான இலங்கையருக்கு லண்டன் நீதிமன்றம் ஒன்று இன்று நிபந்தனையுடன் கூடிய மன்னிப்பளித்து விடுதலை செய்ததுடன் சுமார் நூறு ரூபாய் (5 கினி) முடிக்குரிய செலவைக் கட்டுமாறும் உத்தரவிட்டது.

ஜனநெருக்கடியான ரயில் வண்டியில் பெண்களிடம் வம்பு செய்ததாக அருளையா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் துப்பறியும் பொலிஸ்காரர் ஒருவர் சாட்சியமளிக்கையில் தங்களுக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து சம்பவ தினத்தன்று தாமும் பெண் பொலிஸ்காரர் ஒருவரும் விக்டோரியா பாதாளரயில் நிலையத்துக்குச்சென்றதாகவும் அங்கு அருளையாவின் றதைக் கண்டதாகவும் கூறினார். "அங்கு ஜனம் அதிகமில்லாத ஒரு ரயில்வந்தபோது அதில் அருளையா ஏறவில்லை. பின்பு ஒரு ரயில் வந்தது. அதில் ஜனநெருக்கடி இருந்தது. அதில் அருளையா ஏறினார்" என்று அந்தப் பொலிஸ்காரர் கூறினார்.

பெண் பொலிஸ் சாட்சியமளிக்கையில் அருளையா ஏறிய ரயிலில் தாமும் ஏறியதாகவும் அவர் தன்னைக் கூட்டத்தோடு கூட்டமாக நெரித்து முறை தவறி நடந்து கொண்டாரென்றும் அவரிடமிருந்து தாம் விடுபட்டு பொலிசாரிடம் ஒப்படைத்ததாகவும் கூறினார்.

அருளையா சாட்சியமளிக்கையில் இச்சம்பவத்துக்கு தாம் வருந்துவதாகவும், தனக்கு என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை என்றும் கூறினார்.

---

### கீ. ச. அங்கத்தவர் தாலியை அறுத்தாராம்

கீரிமலை, செவ்வாய்

தெல்லிப்பளை கிராம சபையின் மூன்றும் வட்டார உறுப்பினர் திரு. இ. நரசிங்கமும் அவரது சகோதரர் இ. வைரமுத்துவும் கீரிமலையைச் சேர்ந்த சின்னையா பெண் சின்னம்மாவின் தாலிக்கொடியை அறுத்ததாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிராம சபைத் தேர்தலுக்கு மறுநாள் கீரிமலைச் சிவன்கோவிலடியில் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. சந்தேக நபர்களான இருவரும் காங்கேசன் துறைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். புலன் விசாரணை நடைபெறுகிறது.

## மண்டபம் முகாமை சென்னை அரசாங்கம் வாங்கும்
### இலங்கை தூதர் பேச்சு நடத்துகிறார்

சென்னை, ஜூன் 9

மண்டபத்தில் இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடங்களையும், நிலத்தையும் விற்பது சம்பந்தமாகப் பேச்சு நடத்துவதற்காக டில்லியிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. அமரசிங்க சென்னைக்கு வந்திருக்கிறார்.

மண்டபம் முகாம் 380 ஏக்கர் பரப்புள்ளது. அதில் 400 கட்டடங்களும் தோட்டங்களும் இருக்கின்றன.

தமிழ்நாட்டு அரசாங்கம் இவற்றைவாங்க முதல் சலுகை அளிக்கப்படும் என திரு. அமரசிங்க கூறினார்.

---

### வேலைநிறுத்தம் நீடிப்பு

கொழும்பு, செவ்வாய்

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தம் நீடிக்கிறது. சுமுகமான தீர்வு ஏற்படவில்லையானால் இதரகூட்டுஸ்தாபனங்களிலுள்ள ஊழியர்களும் விரைவில் அனுதாப வேலைநிறுத்தம் செய்வரென தொழிற்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

### என்.எம்.காரியதரிசி

கொழும்பு, செவ்.

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுக் காரியதரிசியாக டாக்டர் என். எம். பெரேரா நேற்றிரவு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். கட்சியின் புதிய மத்திய கமிட்டிக் கூட்டத்தில் டாக்டர் பெரேராவின் பெயரை திரு. ஜி. வில்லியம் பிரேரிக்க திரு. வணிகதுங்கா ஆமோதித்தார்.

### பிரஜாவுரிமை பற்றி நிதி மந்திரி

கொழும்பு, செவ்வாய்

பிரஜாவுரிமை பெறுவதில் உள்ள சில கஷ்டங்களை நீக்குவதற்குத் தாம் முயற்சிசெய்வதாக நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின அகில இலங்கை சோனகர் சங்கக் காரியதரிசிக்குத் தெரிவித்துள்ளார்

மணிவாக்கு

நீதியான நல்வாழ்வை நாடி இடைவிடாது செய்யும் முயற்சியே முதன்மையான பயனை அளிக்கும்.
— புத்தபிரான்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ௴ 28 உ. (10-6-64)

## மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதுவிஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ.எம். வி. நாகநாதன் சுகாதாரமந்திரியைத் தந்திமூலம் கேட்டிருக்கிறார். மருந்துத் தட்டுப்பாடுபற்றி பலரும் பலமுறையும் எடுத்துக் கூறியும் நிலைமையில் இதுவரை மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத்தெரியவில்லை. ஒரு சிறந்த டாக்டரான நல்லூர் எம். பி.யின் தந்தி சுகாதார மந்திரியின் கண்களைத் திறக்குமென நம்புவோம்.

நாட்டிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளில் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியும் ஒன்று. இது யாழ்ப்பாண நகரில் அமைந்திருந்த போதிலும் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலிருந்து மட்டுமன்றி வட பகுதியின் இதர மாவட்டங்களிலிருந்தும் நோயாளர்கள் இங்குவந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு இடநெருக்கடி ஒருபெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள் குறைவு. கட்டில்கள் இல்லாமல் எத்தனையோ நோயாளர் தரையிலும் படுத்துக் கிடக்கின்றனர். இது தவிர அன்றாடம் மருந்து வாங்கிச் செல்வதற்கு வரும் நோயாளிகள் வெளிநோயாளர்பகுதியில் 'கியூ'வில் கால்கடுக்க நிற்பதும் குழந்தைகுட்டிகள் தரையில் கிடந்தும் கூட்டத்தில் நெரிபட்டும் அல்லல் படுவதும் பெரும் கண்ராவி. நோயாளியைப் பரிசோதித்து டாக்டர்மருந்தை எழுதிக்கொடுத்தும்மருந்துக்காக கால்கடுக்க நின்றும் கடைசியில் "இந்த மருந்து இல்லை" என்ற பதில் தான் கிடைக்கிறது. "வெளியில் வாங்க முடியுமானால் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றும் அவர்கள் யோசனை சொல்லியனுப்புகிறார்கள்.

பணம் கொடுத்து மருந்து வாங்கக் கூடிய நிலையில் எத்தனை பேர் உள்ளனர். அந்த வசதியிருந்தால் தனிப்பட்ட வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற முடியுமே. மருந்துகளுக்குச் சிலசமயங்களில் தட்டுப்பாடு ஏற்படுவது சகஜம்தான் என்று வைத்துக் கொண்டாலும் எத்தனை நாளைக்கு இந்தத் தட்டுப்பாடு?

## கலாரங்கம்

கொழும்பு, செவ்.

இம்மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு பம்பலப்பிட்டிச் சரஸ்வதி மண்டபத்தில் இலங்கை சங்கீத நாட்டிய சங்கத்தினர் அளிக்கும் 'கலாரங்கம்' என்ற இசை நாட்டிய, நாடகக் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கீத பூஷணம் கமலா முத்துசாமியின் இசை நிகழ்ச்சியும் சுகேந்துதந்தரின் மாணவ மாணவிகளின் நாட்டியநிகழ்ச்சிகளும் நவாலியூர் சோ. நடராஜனின் மொழிபெயர்க்கப்பட்ட 'டாக்டர் போஸ்டஸ்' என்ற நாடகத்தின் சில காட்சிகளும் அன்றைய நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

---

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதற்குரிய காரணம் தான் விந்தையாகவிருக்கிறது.

ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் 'அரசாங்க மெடிக்கல் ஸ்டோர்'ஸில் இருக்கும் 'புண்ணியவான்கள்' நோயாளிகளின் உயிரைப் பணயம் வைத்து சிங்களம்மட்டும் சட்டத்தை அமுல் நடத்தப்பார்ப்பதுதான் மருந்துத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்பதை டாக்டர் நாகநாதன் சுகாதார மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்தி எடுத்துக்காட்டுகிறது. சிங்களம்மட்டும் சட்டம் உயிர்ப்பலி வாங்கியது போதாதென்று நோயாளிகளையும் பலிவாங்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா? அத்தியாவசியமான மருந்துகளை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியினர் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும்கூட் இந்தக் கோரிக்கை சிங்கள மொழியில் எழுதப்படவில்லையென்ற காரணத்துக்காக அவை நிராகரிக்கப்பட்டுள்ளது உண்மையாயின் இதையிட்டு சுகாதார மந்திரியோ, அரசாங்கமோ நிச்சயம் பெருமைப்பட முடியாது.

சிங்களம் மட்டும் சட்டத்தைக்கொண்டு வந்த காலஞ்சென்ற பிரதமர் திரு, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காகூட, தமது சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு நோயாளிகள் துன்புறுத்தப்படுவார்கள்என்பதை நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துகள் அனுப்பப்படாததற்குரிய உண்மைக் காரணங்களையும் நல்லூர் எம். பி.யின் குற்றச்சாட்டுக்களையும் சுகாதார மந்திரி உடனடியாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

நல்லூர் எம். பி. அரசியல்வாதிமட்டுமல்ல; ஒரு டாக்டரும்கூட! நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள்பற்றி சுகாதார மந்திரியைவிட அவருக்கு அதிகம் தெரியுமென்பது உண்மை. எதிர்க்கட்சி எம். பி.யின் புகார் என்று அசட்டை செய்தால் நோயாளிகளின் சாபத்துக்கு ஆளாக நேரிடும்.

## "வசதிக்கட்டணத்தை ரூ. 2ஆக குறைக்க வேண்டும்"
### மாணவர் மன்றக் கிளை கோரிக்கை

உடுப்பிட்டி, செவ்.

பெருகிவரும் மாணவர் பிரச்னைகளைத் தீர்க்கும் பட்சத்தில் அரசாங்கத்திற்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கும் நோக்கத்துடன் அகில இலங்கை மாணவர்சங்க வடமராட்சிக் கிளையின் மகாநாடு நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் அமைப்பாளர் திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை மாணவர் சங்கச் செயலாளர் திரு. எஸ். யோகநாதன் பேசுகையில், "கூப்பனுக்கு 4 யார் துணி கிடைக்கும் இந்நாட்களில் மாணவர்களை ஒரேவிதமான உடையில் வரும்படி வற்புறுத்த முடியாது என்று கூறினார்.

திரு. வேலும்மயிலும், இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் திரு. க. கந்தசாமி ஆகியோரும் பேசினர். இம்மாதம் 24-ம் திகதி யாழ்நகரில் நடைபெறவிருக்கும் மாணவர் மகாநாட்டில் வடமராட்சிக் கிளையின் சார்பில் கலந்து கொள்வதற்கான தயாரிப்புக் கமிட்டியில் திருவாளர்கள்: இ. மோகன், கி. சிவஞானம், எஸ். சிவானந்தம், இராமச்சந்திரன், கே. வீரவாகு, எஸ். குணநாயகம், வேல்முருகு, சிவகுருநாதன், த. பாலகிருஷ்ணன், க. இராசேந்திரன், வ. ரவிச்சந்திரன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் பிரேரிப்பதற்கென பின் வரும் தீர்மானங்கள் வடமராட்சிக் கிளையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வசதிக்கட்டணத்தை தவணைக்கு 20 ரூபாவிலிருந்து 2 ரூபாவாக மாற்றவேண்டும்.

சகல பாடசாலைகளுக்கும் விஞ்ஞானக்கல்வி வசதி வழங்கப்படல் வேண்டும்.

சகல மாணவர்களுக்கும் உயர்தரக் கல்விவசதி வழங்கப்படல்வேண்டும்.

பிரவேச கட்டணம், விடைத்தாள் கட்டணம், விஞ்ஞான நூல்நிலயக் கட்டுப்பணம் ஆகியன வசூலிப்பது நிறுத்தப்படல்வேண்டும்.

பாடப்புத்தகங்கள் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மலிவாக விற்பனை செய்யப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையை சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியாக மாற்றவேண்டும்.

யாழ்ப்பாண கலாச்சார பல்கலைக்கழகத்தில் பொறியியல் வைத்திய விஞ்ஞானத்துறைகளை ஏற்படுத்தல வேண்டும்.

படித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகள் வழங்கவேண்டும்.

## நீச்சல் போட்டி முடிவுகள்

சுழிபுரம், செவ்.

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசம் நடாத்திய இரண்டாவது அங்கமான தேசிய விளையாட்டு விழா கீரிமலையில் நடைபெற்றது. நீச்சல் போட்டி, பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த நீச்சல் வீரர் திரு. மு. நவரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. போட்டி இரண்டு பிரிவாக நடைபெற்றது. மாணவர்களும், வயதுவந்தவர்களுமாக பலர் பங்குபற்றினர்.

மாணவர் பிரிவில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றனர்.

இ. யேசுதாசன், சி. செல்வசிங்கம், இ. ரகுநாதன்.

ஆறுதல் பரிசு பெற்றவர்கள் வருமாறு:-

இ. மனோரஞ்சிதம், இ. சத்தியசீலன், மு. சுகந்தசீலன், வி. எம். சாமி, சி. சர்வானந்தன், வ. பரமானந்தம், இ. ஞானபண்டிதன், சி. சிவசுப்பிரமணியம், த. தங்கராசா.

வயதுவந்தவர்களுக்கான போட்டியில் வெற்றிபெற்றோர் வருமாறு:-

ச. சிறில், ச. தேவதாஸ், க. தேவசிகாமணி, க. சதாசிவம். மு. செல்வராசா,

## சமயபாடப் பரீட்சை

நல்லூர், செவ்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆண்டு தோறும் நடத்தும் சமய பாடப்பரீட்சை வருகிற ஆகஸ்ட்மாதம் நடைபெறவிருக்கின்றது. தேவாரம், உபந்நியாசம், புராண படனம் ஆகிய மூன்றிலும் பரீட்சைகள் நடத்தப்படும். மேற்பிரிவு, மத்தியபிரிவு, கூழ்ப்பிரிவு, ஆரம்பபிரிவு என வகுக்கப்பட்டு ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் பரீட்சைகள் நடத்தப்படும். பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குரிய பரிசுகள் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் சைவமகாநாட்டில் வழங்கப்படும்.

## ஆயுர்வேதவைத்தியசாலை திறப்புவிழா

பளை, செவ்வாய்

இங்குள்ள மக்களின் தேவைக்கென ஒரு புதிய ஆயுர்வேத வைத்தியசாலையை இப்பகுதிக் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை வரும் வெள்ளிக்கிழமை திறந்து வைப்பார்.

## வரணி கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்று நடைபெற்ற வரணி கிராமசபை தேர்தல் முடிவுகள்:—

1-ம் வட்டாரம்
ஆறுமுகம் நடராசா 217, சின்னட்டி முருகன் 92, பழுதானவை 2.

2-ம் வட்டாரம்
சுப்பர் சிதம்பரநாதர் 134, வைத்தியநாதர் செல்லையா 103, பழுதானவை 3.

3-ம் வட்டாரம்
கிருஷ்ணர் முருகுப்பிள்ளை 137, குமரர் கணபதிப்பிள்ளை 69, சின்னையா வேலுப்பிள்ளை 51, பழுதானவை 1.

4-ம் வட்டாரம்
கிருஷ்ணர் வீரகத்தி 112, குமாரசாமிமருதயனுபிள்ளை 82, பழுதானவை, 2.

5-ம் வட்டாரம்
சின்னையா கந்தசாமி 121, வேலன் சின்னத்தம்பி 81, கதிரன் முருகர் 48, பழுதானவை 2.

6-ம் வட்டாரம்
ஆறுமுகம் கந்தையா 117, வேலுப்பிள்ளை கதிர்காமர் 72, பழுதானவை 1.

11-ம் வட்டாரம்
கே. கணபதி 108, எஸ். காசிப்பிள்ளை 83, எஸ். சுப்பு 61, எஸ். சிதம்பரம் 6, பழுதானவை 1.

12-ம் வட்டாரம்
சிதம்பரன் கணபதிப்பிள்ளை 160, சிதம்பரப்பிள்ளை குலசேகரம் 142, பழுதானவை 2.

13-ம் வட்டாரம்
நல்லமாப்பாணர் சிவசுப்பிரமணியம் 94, தியாகராசா திருஞான நாயகம் 54, முத்தன் சின்னக்குட்டி 49, பழுதானவை 1.

14-ம் வட்டாரம்
கந்தையா தம்பையா 203, கதிரன் சின்னத்துரை 172, பழுதானவை 6.

15-ம் வட்டாரம்
கதிரன் நாகன் 276, கதிரன் செல்லன் 129, வெள்ளையன் சின்னத்தம்பி 51, பழுதானவை 4.

## கடவுளும் நேருவும்

புதுடில்லி, ஜூன் 9

கடவுள்மீது மறைந்த மேதை ஜவஹர்லால் நேருவுக்கு நம்பிக்கையுண்டா, இல்லையா என்ற கேள்விக்கு இந்தியப் பாராளுமன்ற அங்கத்தவர் பிரகாசவீர் சாஸ்திரி பதிலளித்திருக்கிறார். நேருஜியுடன் இதுபோன்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்குச் சாஸ்திரிக்கு அடிக்கடி வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன.

"நேருஜிக்கு மதத்தில் நம்பிக்கையுண்டு. ஆனால் மதத்தின் பெயரால் நடைபெறும் சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் சிறிதளவுகூட நம்பிக்கைகிடையாது" என்று சாஸ்திரி தெரிவித்தார்.

அண்மையில் நேருஜியுடன் ஓர் ஆரிய சமாஜ நிகழ்ச்சிக்கு சாஸ்திரி போயிருந்தார். அப்போது நேருஜியிடம் சாஸ்திரி "கடவுள் மீது உங்களுக்கு நம்பிக்கையுண்டா?" என்று நேரடியாகக் கேட்டார். அதற்கு நேருஜி என்ன சொன்னார் என்பதை சாஸ்திரி கூறினார்.

"கடவுள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் கடவுள் மனிதர்களை நரகத்துக்கும் மோட்சத்துக்கும் அனுப்புகிறார் என்பதை நான் அடியோடு நம்பவில்லை. என் கண்ணுக்குத் தெரியாத வர்ணிக்க முடியாத சக்தியொன்று இந்த உலகத்தை ஆட்டி வைக்கிறது என்று நம்புகிறேன்."

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேசிய ஒருமைப்பாட்டுக்கு மதபோதனை உதவியாயிருக்கும் என்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு நேருஜி வந்திருந்தார். எம்மாதிரியான மதபோதனை என்று நேருஜி கேட்டார். ரிக் வேதத்திலிருந்து சில பகுதிகளை சொல்லிக் கொடுப்பது போன்ற மத போதனைகள் என்று கனசியாமகுப்தா கூறினார். 'உலகத்திலே மிகவும் பழைமையான நூல் ரிக் வேதம்தான். உன்னதமான இலக்கியம்; இந்த விஷயம் பரிசீலனைக்குரியதே என்றார் நேருஜி.

"கடந்த ஐந்தாறு வருடங்களாக நேருஜி கீதையையும், உபநிஷத்துக்களையும் படிக்க ஆரம்பித்தார். கதோபநிஷத், பருஹ தாரண்யக உபநிஷத், காண்டோக்ய உபநிஷத் ஆகியவற்றை அவர் விருப்பத்தோடு படித்தார். நேருஜிக்கு மிகவும் பிடித்தமானது, 'மக்கள் எந்தப் பாதையில் சென்றாலும் அங்கு நானே சென்று அவர்களைச் சந்திக்கிறேன்' என்று பகவான், அர்ஜுனனிடம் சொல்லும் கீதா வாக்கியமேயாகும்.

"நேருஜி ஒரு மாணவனைப் போல் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று ஸ்ரீ சங்கரரின் வேதாந்த தத்துவப் பாடங்களைக் கேட்டுக் கொண்டார்" என்று சாஸ்திரி கூறினார்.

## மகாமாரி அம்பாள் கோவில் உற்சவம்

ஊர்காவற்றுறை, செவ்.

இம்மாதம் 5-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 12-ந் திகதிவரையும் நடைபெறும் புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய திருவிழா நாட்களில் கூட்டுப்பிரார்த்தனை, சமயவிரிவுரைகள் நடத்துவதற்கு புளியங்கூடல் சைவமகா சபையினர் தீர்மானித்துள்ளனர்.

தினமும் விசேட நிகழ்ச்சிகளும், ஆராதனைகளும் நடைபெறுவதற்கு முன்பதாக கூட்டுப்பிரார்த்தனை, சமயவிரிவுரைகள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் ஒன்பதாம் திருவிழா இன்று நடைபெறும், நாளைய தினம் தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

# இந்தியாவின் புதிய மந்திரிசபை பதவியேற்றது

# இந்திராகாந்தி, சஞ்சீவரெட்டி, பட்டீல் ஆகியோருக்கும்

# மந்திரிப் பதவிகள்

## பழைய அமைச்சர்களில் மாற்றமில்லை

புதுடில்லி, ஜூன் 9

**திரு. லால்பகதூர்சாஸ்திரியைப் பிரதமராகக் கொண்ட இந்தியாவின் புதிய மந்திரி சபை இன்று காலை பதவியேற்றது. தமது மந்திரிசபையின் அங்கத்தவர்கள் விபரம்பற்றிய அறிக்கையொன்றை நேற்று நள்ளிரவு சுமார் ஒரு மணிக்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி கொடுத்தார். சிலமணி நேரத்துக்குப் பின்னர் இவ்வறிக்கை ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனினால் வெளியிடப்பட்டது.**

புதிய மந்திரிசபையில், மந்திரிகளின் எண்ணிக்கை பதினைாக அதிகரித்துள்ளது. நேருஜியின மந்திரிசபையில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை பதின்மூன்றாகவிருந்தது. சாஸ்திரியின் மந்திரிசபையில் மறைந்த தலைவர் நேருஜியின் புதல்வி திருமதி இந்திரா காந்தி கபினட் மந்திரியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். இவருடன் ஆந்திர பிரதேச முதன்மந்திரி திரு. சஞ்சீவரெட்டி, முன்னாள் மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்

மந்திரிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் பல மந்திரிகளின் இலாகாக்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. எந்த மந்திரியும் பதவி துறக்கவில்லை. ஆனால் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்ததுபோல் முன்னாள் நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாய், திரு. ஜகஜீவன்ராம் ஆகியோர் திரு. சாஸ்திரியின் மந்திரிசபையில் இடம்பெறவில்லை. புதிய மந்திரிசபை உறுப்பினர்களும் இன்று சத்தியபிரமாணஞ் செய்து கொண்டனர். உதவி மந்திரிகளின் விபரங்கள் ஓரிரு தினங்களில் வெளியிடப்படும்.

நேருஜி மறைந்ததைத் தொடர்ந்து இன்று லால்பகதூர்சாஸ்திரி தலைமையில் புதிய மந்திரிசபை பதவியேற்றது. நேருஜி மரணமானதைத் தொடர்ந்து இந்தியாவின் தற்காலிக பிரதமராக திரு. குல்சாரிலாலநந்தாவை நியமிக்கும்படி திரு. காமராஜர் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து திரு. நந்தாவை இந்தியாவின் இரண்டாவது பிரதமராக டாக்டர் ராதாகிருஷ்ணன் நியமித்தார். இதன்பின்னர் காங்கிரஸ் பாராளுமன்ற கமிட்டிக் கூட்டம் நடைபெற்று திரு. லால்பகதூர்சாஸ்திரி ஏகமனதாக இந்தியாவின் மூன்றாவது பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார். இந்த முடிவுக்கிணங்க திரு. குல்சாரிலால் நந்தா தமது பிரதமர் பதவியை ராஜினமாச் செய்து கொண்டார்.

## சாஸ்திரி மந்திரிசபை விபரம்:

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி. உள்துறைமந்திரி: திரு. குல்சாரிலால்நந்தா. தகவல் ஒலிபரப்பு மந்திரி: திருமதி இந்திரா காந்தி. எஃகு, சுரங்கமந்திரி: திரு. சஞ்சீவரெட்டி. ரயில்வே மந்திரி: திரு. எஸ் கே. பட்டீல். கனரக, என்ஜினியரிங் மந்திரி: திரு. சுவர்ண்சிங். சட்டமந்திரி: திரு. ஏ. கே. சென். பாதுகாப்பு மந்திரி திரு. சாவன். உணவு, விவசாயமந்திரி: திரு ஸி சுப்பிரமணியம். பெட்ரோலியம், இரசாயன துறைமந்திரி: திரு. ஹூமாயூன்கபீர். சிவில், விமானச்சேவை மந்திரி: திரு. சத்தியநாராயண்சின்ஹா. நீர்ப்பாசனமந்திரி: திரு. தாஸப்பா. கல்விமந்திரி: திரு. சக்ளா. மறுவாழ்வளிப்பு மந்திரி: திரு. மகவீர்தியாகி. வர்த்தகமந்திரி: திரு. மனுபால்ஷா. தொழிலாளர் நலமந்திரி: திரு. ரகுராமையா. தொழில்மந்திரி: திரு. சஞ்சீவய்யா. நிதிமந்திரி: திரு. டி. கே. கிருஷ்ணமாச்சாரி.

### சில பதவி மாற்றங்கள்

திரு. சாஸ்திரியின் மந்திரி சபையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நேருஜியின் மந்திரிசபையில் பதவிவகித்த சில மந்திரிகள் அதே பதவிகளில் தொடர்ந்திருக்க சிலருடைய இலாகா பொறுப்புகள் மட்டும் மாற்றப்பட்டிருக்கின்றன. கல்விமந்திரி திரு. சக்ளா, பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், சட்டமந்திரி திரு. சென், வர்த்தகமந்திரி திரு. மனுபாய்ஷா ஆகியோர் தொடர்ந்து தமது இலாகா பொறுப்புகளை வகித்து வருவர். ஆனால் எஃகு, கனரகமந்திரியாகவிருந்த திரு. ஸி. சுப்பிரமணியம் தகவல், ஒலிபரப்பு மந்திரியாகவிருந்த திரு. சத்தியநாராயண் சின்ஹா, ரயில்வேமந்திரி திரு. சுவர்ண்சிங் உட்பட மற்றும் சிலருடைய இலாகா பொறுப்புகள் இப்பொழுது மாற்றப்பட்டிருக்கின்றன.

பிரதமர் லால்பகதூர்சாஸ்திரி, வெளிவிவகார அணுசக்தி இலாகா பொறுப்புகளையும் வகிப்பார்.

## மேஜருக்கு ஆயுட் சிறை

### 8 பௌத்தர்களைக் கொன்றூராம்

சைகோன், ஜூன் 9

கொலைக் குற்றத்துக்காக மேஜர் டாங்சை என்ற தென் வியட்னும் இராணுவ அதிகாரிக்கு புரட்சிக் கவுன்சில் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கடந்தவருடம் மேமாதம் ஆர்ப்பாட்டக்காரர்களை அரசாங்க துருப்புகள் கொலை செய்தபொழுது, எட்டு பௌத்தர்களை கொலைசெய்ததாக டாங்சை மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## படைக்குறைப்பு மகாநாடு

ஜெனிவா, ஜூன் 9

படைக்குறைப்பு மகாநாடு இன்று மீண்டும் கூடியது. இந்த மகாநாட்டில் சோவியத் வெளிவிவகார மந்திரி கலந்து கொண்டார். 1962-ம் ஆண்டுக்குப்பின்னர் இப்பொழுதுதான் அவர் இம் மகாநாட்டில் கலந்துகொள்கிறர்.

## அங்கத்தவர்கள் வெளிநடப்பு

டாக்கா, ஜூன் 9

கிழக்குப் பாகிஸ்தான சட்டசபை நேற்றுக் கூடியபொழுது, எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர். பல்கலைக்கழகமொன்றை மூடியதற்கு அங்கத்தினர்கள் தெரிவித்த ஆட்சேப பிரேரணையை கொண்டுவர சபாநாயகர் மறுத்ததே அங்கத்தவர்கள் வெளிநடப்புக்குக் காரணமாகும்.

## மோட்ச தீபம்

சென்னை, ஜூன் 9

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவில் பொது தீட்சகர்கள், ஸ்ரீ நடராஜர் கோயிலின் நான்கு கோபுரங்களின் உச்சியிலுமுள்ள 216 பெரும் அகல் விளக்குகளில் மோட்ச தீபங்களையும் ஸ்ரீ சிவகாமிசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி சந்நிதியில் நெய்தீபங்களையும் ஏற்றி நேருவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தனர்.

## 20 பேர் மாண்டனர்

டாக்கா, ஜூன் 9

கிழக்குப் பாகிஸ்தானில் சார் பகுதியில் வீசிய பெரும் புயலில் 36 பேருடன் பத்மா நதியில் சென்ற ஒரு படகு கவிழ்ந்துவிட்டது. 16 பேர் நீந்திக் கரைசேர்ந்தனர். 20 பேரின் நிலை தெரியவில்லை.

## நெஞ்சம் மறக்கவில்லை!

புதுடில்லி, ஜூன் 9

இந்திய பார்லிமெண்டரிக் காங்கிரஸ் கட்சி கூட்ட நடவடிக்கைகள் குறித்து கடந்த இரண்டு வருடங்களாக பத்திரிகை நிருபர்களுக்கு கட்சி காரியதரிசி திரு. ரகுநாத்சிங் விபரம் தெரிவிப்பது வழக்கம். அதேமாதிரி இம்முறை நடைபெற்ற கட்சிக் கூட்டம்பற்றி நிருபர்களிடம் விபரம் தெரிவித்தார்.

"கூட்டத்துக்கு நேரு தலைமைவகித்தார்" என்று ஆரம்பித்த அவர் உடனே தம்மை சற்று வேதனையுடன் திருத்திக்கொண்டு; "சாஸ்திரி தலைமைவகித்தர்" என்றூர்.

## ஸான்ஸிபாருக்கு சீன உதவி

பீக்கிங், ஜூன் 9

ஸான்ஸிபாருக்கு கம்யூனிஸ்ட் சீன 50 லட்சம் பவுண் வழங்குமென்று இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஸான்ஸிபாரின் கோரிக்கைமீதே இவ்வுதவி வழங்கப்படுகிறதாம்.

## ஹொனலுலுவில் டாக்டர் ராகவன்

ஹொனலுலு, ஜூன் 8

"அமெரிக்காவில் அளவற்ற வடமொழி நூல்களைக் காண முடிவது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது. சுமார் 2000க்கு மேற்பட்ட வடமொழிக் கையெழுத்துப் பிரதிகள் இங்குள்ள பல்கலைக்கழக நூல் நிலையங்களிலும் தனியார் நூல் நிலையங்களிலும் உள்ளன. இவற்றை முறைப்படுத்தி ஒரு பட்டியல் தயாரிப்பது இன்றியமையாத பணியாகும்" என்று அமெரிக்கக் கல்வி நிலையங்களைக் காண்பதற்காகப் 11 கிழமை சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொண்டிருக்கும் சென்னைப் பல்கலைக்கழக வடமொழித் துறைத் தலைவர் டாக்டர் ராகவன் அமெரிக்க பத்திரிகை நிருபரொருவருக்களித்த பேட்டியின்போது கூறினார்.

அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு டோக்கியோ செல்லும் வழியில் டாக்டர் ராகவன் ஹொனலுலு வந்துள்ளார். ஹொனலுலு வேதாந்த சபையில் 'இந்திய தத்துவ தரிசனம்' என்ற பொருளில் இவர் ஒரு சொற்பொழிவும் செய்தார்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### மறைந்த மேதைக்கு நினைவுச் சின்னம்

காலஞ் சென்ற இந்தியப் பிரதமர் நேருஜிக்கு சென்னையில் நினைவுச் சின்னம் நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டம் சென்னை மேயர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நேரு குழந்தைகள் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தபடியால் நினைவுச் சின்னம் குழந்தைகளுடன் தொடர்புள்ளதாக இருக்க வேண்டுமென்று பலர் கருத்துத் தெரிவித்தார்கள். ம. பொ. சி, என். வி. நடராஜன் ஆகியோர் இக் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

### இளைஞனின் பரிதாப மரணம்

சென்னையிலுள்ள திருவள்ளூர் கிராமத்துக்கருகே ஓர் இளைஞர் தனது மாட்டுவண்டியை மிக வேகமாகச் செலுத்திக் கொண்டு போனபோது தவறுதலாகக் கீழே விழுந்து வண்டிச் சில்லுக்குள் நெரிபட்டு மரணமடைந்தார்.

### 16 கிடங்குகள் கண்டுபிடிக்கப்பட்டன

சென்னை ஜார்ஜ்டவுனில் இவ்வார ஆரம்பத்தில் நான்கு நாட்களாகப் பொலிஸார் நடத்திய சோதனையின் பேரில் லைசென்ஸ் இல்லாத 16 கிடங்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கிடங்குகளுக்குள் வெடிக்கக் கூடிய ரசாயன மருந்துகளும், உணவு தானியங்களும் இருந்தனவாம். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடருவதா என்பது பற்றி அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள்.

### பஸ்ஸுக்குப் பால்காரர் பலி

சென்னை ராயப்பேட்டையில் ஓடிக்கொண்டிருந்த பஸ், எதிரே சைக்கிளில் வந்து கொண்டிருந்த பால்காரர் மீது ஏறி பால்காரருக்குப் பின்னல் வந்துகொண்டிருந்த டாக்ஸியுடன் மோதிக்கொண்டது. பால்காரர் உடனே மரணமடைந்தார்.

## இதுவன்றே பக்தி!

ஸ்ரீநகர், ஜூன் 9

நேருவின் அஸ்தி கலசம் இங்கிருந்தபொழுது ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாகச் சென்று நேரு அஸ்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

இரு கண்களும் தெரியாத ஒரு கிழவியும் தனது மைந்தர்களின் உதவியுடன் அஞ்சலி செலுத்தினர்.

## நேரு கல்லூரி

கௌஹாட்டி, ஜூன் 9

கௌஹாட்டியிலிருந்து 37 மைல் தூரத்திலுள்ள போகோவில் உள்ள போகோ கல்லூரிக்கு ஜவஹர்லால் நேருவின் பெயரை வைப்பது என்று கல்லூரி நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்

## கீலர் விடுதலை

லண்டன், ஜூன் 9

பிரிட்டிஷ் மந்திரிசபையை கலக்கிவைத்து யுத்த மந்திரி புரோபியூமாவின் பதவி துறப்புக்கும் காரணமாகவிருந்த செல்வி கிறிஸ்டின் கீலர் நேற்று சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். கீலர் கடந்த 9 மாதகாலமாக சிறையிலிருந்தார்.

## லாவோஸுக்கு அமெரிக்க போர்விமானங்கள்!

வியன்டைன், ஜூன் 9

லாவோஸில் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் உளவறியும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதிகளுக்கு ஆயுதம் தாங்கிய அமெரிக்க போர் விமானங்கள் செயல்படவிருக்கின்றன. உளவு விமானங்களுக்கு உதவியாகவே இப்போர் விமானங்கள் ஜார்ஸ் சமவெளியில் பறக்கிறதென்று அமெரிக்க வெளிவிவகாரப்பகுதி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அமெரிக்க உளவு விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை மோசமாகிவிட்டதென்றும் லாவோஸுக்கு அமெரிக்க போர்விமானங்கள் வருவதற்கு லாவோஸ் பிரதமர் இளவரசர்சுவர்ணபூமா அங்கீகாரம் அளித்துவிட்டார் என்றும் அமெரிக்க அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லாவோஸ் பிரதமரின் அனுமதியின்றி அமெரிக்க போர் விமானங்கள் லாவோஸுக்கு அனுப்பப்படமாட்டாதென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

### விமானி கைது

இரு தினங்களுக்கு முன்னர் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க உளவுவிமானத்தின் விமானி (பைலட்) நேற்று பதட்லாவோ படைகளினல் கைதுசெய்யப்பட்டார்.

### தூதர்கள் பேச்சு ஆரம்பம்

லாவோஸ் நெருக்கடி குறித்து வியன்டைனில் இன்று ஆறு நாடுகளின் தூதர்கள் பேச்சுகளை ஆரம்பித்தனர். இந்தப் பேச்சுகள் சனிக்கிழமை முடியுமென்றும் அன்றே அறிக்கை வெளியிடப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'பீலிக்ஸ் அரசாங்கத்தைகைப்பற்ற போவதாக 3வது எதிரிகூறவில்லை'

## புரட்சிசதிவழக்கில் விஜயகோன்சாட்சியம்

கொழும்பு, செவ்

"எவ்விதமான மத, அரசியல் காரணங்களுக்காக, கர்னல் டீ. சேரம் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கவில்லை. நாடு வீழ்ச்சியடைந்துவருவதாக அவர் கருதினபடியாலும், இதற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று அவர் தீர்மானித்தபடியாலுமே புரட்சிச் சதியில் பங்குபற்றினர். நாட்டைப் பாதுகாப்பதற்காக, ராணி மாளிகைக்குச் சென்று அரசாங்கத்தை ஏற்று நடத்துமாறு கவர்னர் ஜெனரலை கேட்டுக்கொள்ளவும் அவர் திட்டமிட்டிருந்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரியும், தற்போது பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராகக் கடமையாற்றுபவருமான மேஜர் ஜெனரல் எச். டபிள்யூ. ஜி. விஜயகோன், நேற்று நடைபெற்ற புரட்சிச் சதிவழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. விஜயகோன் தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:-

பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினுல் விசாரணை செய்யப்பட்டபோது திரு. டயஸ் பண்டாரநாயக்கா, திரு. கியூ. டயஸ் ஆகிய இருவரை மட்டுமே கைது செய்ய திட்டமிட்டிருந்ததாக டீ. சேரம் கூறினர். காலால் படையினருக்கு துப்பாக்கி சுடுவதில் பயிற்சியளிக்கப்பட்டது. பாதுகாப்பு, தற்காப்பு கமிட்டிக் கூட்டத்தில் பயிற்சியளிப்பதென தீர்மானிக்கப்பட்டது. துறைமுக வேலைநிறுத்தம் காரணமாக 61-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய பகுதியில் படையினர் சேர்க்கப்பட்டனர். 62-ம் ஆண்டு ஜனவரி 12ம் தேதி எல்லா உயர்தர அதிகாரிகளும் ஒரு மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டனர். இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்ற தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாம். இம்மகாநாட்டை கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அம்மகாநாட்டில் இராணுவத்தினர் அரசாங்கத்தைக் கைப்பற்ற தீர்மானித்திருப்பதையும் இராணுவ அதிகாரி என்ற முறையில் நான் இதை விரும்பவில்லையென்றும் தெரிவித்தேன். நடவடிக்கையில் மிகவும் கவனமாக இருக்கும்படி எல்லா அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டேன் பிழையானதாக தெரியும் எதையும் செய்யவேண்டாமென்றும் கூறினேன். ஜனவரி 27 ம் தேதிக்கு இரு நாட்களுக்குமுன் இரண்டாவது எதிரியான திரு. மெல் கவர்னர் ஜெனரலிடமிருந்து உத்தரவு வந்திருப்பதாக என்னிடம் கூறவில்லை. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரசாங்கத்தை கைப்பற்றப்போவதாக 3 வது எதிரியான டீ. சேரம்என்னிடம் கூறவில்லை.

# சிமெந்து தொழிலாளர் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், செவ்.

தங்களின் எட்டுக் கோரிக்கைகளை 31 நாட்களுக்குள் ஏற்று அமுல்செய்யாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக காங்கேசன் சிமெந்து ஐக்கிய தொழிலாளர் யூனியன் காரியதரிசி சிமெந்து கார்ப்பரேஷன் தலைவருக்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதம மந்திரி, கைத்தொழில் மந்திரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# நேருஜிக்கு அஞ்சலி

புதுடில்லி, ஜூன் 9

நேருஜியின் அஸ்தி நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் கரைக்கப்பட்டது. புதுச்சேரியில், நேரு அஸ்தி கடலில் கரைக்கப்பட்டது. ஒரு லட்சம் மக்கள் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். 16 ஆண்டுகளுக்கு முன்னர் மகாத்மா காந்தியின் அஸ்தியும் இங்கு தான் கரைக்கப்பட்டது.

மாஸ்கோவில் நேற்று, நேருவுக்கு அஞ்சலிசெலுத்தும் பொருட்டு ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. இப் பிரார்த்தனைக்கூட்டத்தில் சோவியத் முதலாவது உதவிப் பிரதமர், பாதுகாப்பு மந்திரி, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

●

லண்டனில் நேற்று நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பிரிட்டிஷ் பிரதமர் சர் அலக் டக்ளஸ் ஹியூம், லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனர், பாரத சமுகத்தினர், முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மில்லன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

●

பாரிஸிலும், டோக்கியோவிலும் வேறு பல பகுதிகளிலும் பிரார்த்தனைக்கூட்டங்கள் நடைபெற்றன.

# 'உண்மையான இலவசக் கல்வி முறை உருவாகும்'

—கல்வி மந்திரி

யக்கல, செவ்

"நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்றவகையில் கல்வி முறையில் நல்ல மாற்றங்கள் வெகு விரைவில் ஏற்படும். அதிவிரைவில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டு, எதிர்காலத்திலே உண்மையான இலவசக் கல்வி முறை உருவாகும்."

இவ்வாறு கல்வி மந்திரி பி ஜி. கலுகல்ல உறபொல மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "திரு. கன்னங்கரா இலவசக் கல்வி முறையைக் கொண்டுவந்தார். ஆனால் 1956ம் ஆண்டுவரை உயர்தர வகுப்புகளில் ஏழைப் பிள்ளைகள் கல்வி கற்க முடியாமலிருந்தது.

"தற்போதைய அரசாங்கம் கல்விக்காக 30 கோடி ரூபாவை இதுவரை ஒதுக்கியிருக்கிறது" என்ருர்.

# கண்டக்டர்கள் பற்ருக்குறை

அக்கரைப்பற்று, திங்கள்

போக்குவரத்துச் சபையின் அம்பாரை டிப்போவில் போதுமான அளவுக்கு கண்டக்டர்கள் இல்லாதகாரணத்தினுல் போக்குவரத்துச்சேவை கணிசமான அளவுக்கு சீர்குலைந்துள்ளது. கண்டக்டர்கள் பற்ருக்குறை காரணத்தினுல் சாரதிகளும், டிக்கெட் பரிசோதகர்களும் கண்டக்டர்கள் வேலையைச் செய்யவேண்டியதாக இருந்துவருகிறது.

அம்பாரை டிப்போவில் போதுமான பஸ்கள் இருந்த போதிலும் கண்டக்டர்களின் தட்டுப்பாடு காரணத்தினுல் பஸ்கள் எல்லாம் டிப்போக்குள் சும்மா இருக்கிறது. பிரயாணிகள் வீதிக்கரையில் பஸ்ஸை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகிருர்கள்.

பொத்துவிலுக்கும் உகனைக்கும் இடையில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ்சேவைக்கு கண்டக்டர்கள் தட்டுப்பாடாக இருந்து வருவது வழக்கத்தில் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. இதுசம்பந்தமாக பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனப் எம் ஏ. அப்துல்மஜீது போக்குவரத்துச் சபைத் தலைவரை பேட்டிகண்டு பிரஸ்தாபிக்க இருப்பதாக எமது நிருபரிடம் குறிப்பிட்டுள்ளார்.

# மறைந்த சிற்பாசாரியாருக்கு மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

"நமது பாரம்பரிய கலையும் பண்பாடும் விரிந்து பரந்த. கல்வி, கலை, தொழில் நுட்பம் ஆகியவற்றைப்பேணிக் காத்துவரும் பரம்பரையின் ஜோதியாக எம்மத்தியில் விளங்கிவந்தவர் ஆறுமுகம் இந்தியாமலாயாபோன்றவெளி நாட்டிலும் இவரது கலை நுட்பம் தெரிந்துளது. சேர் பொன். இராமநாதன் போன்ற தலைவர்களும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கவர்னர்களாக விளங்கிய வெளிநாட்டினரும் இவரது கலை நுட்பத்தைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியிருப்பதே இவரிடம் மிகுந்த கலைத்துவம் மிளிர்ந்தமையை விளக்குகின்றன".

இவ்வாறு சென்ற ஞாயிறு காலை இயற்கை எய்திய சிற்பாசாரியார் திரு. ஆறுமுகத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் குறிப்பிட்டதாவது:-

"மானிடராகப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன், குருடு நீங்கிப் பிறத்தல். ஆனல் நடராசப் பெருமானைச் சிருஷ்டிக்கும் சிற்பாசாரியராகப் பிறத்தல் அதனிலும் அரிது. திரு. ஆறுமுகத்தின் கலைநுட்பமான சிற்பங்கள் இன்று நம்நாட்டுக் கோவில்களில் அவரது பெருமையைக் கூறுகின்றன. அவரது வழித்தோன்றல்களான மக்கள் அப்பணியைக் கையாண்டுவருகிருர்கள். அத்தொண்டை ஆதரித்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் நாம் மறைந்த சிற்பாசாரியாருக்கு மதிப்புச் செய்தல் வேண்டும்.

பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர் கூறியதாவது:-

ஆறுமுகம் அவர்களுடன் நெருங்கிப் பேசவேண்டிய சந்தர்ப்பங்களும் அவரது கலைப் படைப்புகளைத் தரிசிக்கவேண்டிய நிலையும் எனக்கு ஏற்பட்டுள்ளன. அவர் சிறந்த கலைஞன் என்பதை அவரது மக்களின் திறமையே உணர்த்துகின்றன. காலத்திற்கேற்ற வகையில் மக்களின் சுயசிந்தனைகளுக்கு இடம்கொடுக்காது—சாஸ்திரரீதியானகலைப் பண்பை அவர்கள் கையாளப் பயிற்றியிருக்கிருர். அவரது அணையாத கலைஜோதி அவரது பணியைத் திறம்படச் செய்து மக்கள் அவர் பெருமையைப் பேணுவார்கள் என்று நம்புகிறேன்."

அடுத்துப் பேசிய இரசிகமணி கனக. செந்திநாதன் குறிப்பிட்டதாவது:-

"பழமையான கலைப்பண்பிலே காலூன்றிப் புதுமை செய்பவனே உண்மையான கலைஞன். இந்த உண்மைக் கலைக்குதாரணியாகத் திரு. ஆறுமுகம் அவர்களின் கலை வாழ்க்கையின் சம்பவங்கள் மிளிர்கின்றன. அக்காலத்தில் தனிச் சிங்கம், தனிக்குதிரை போன்ற சிற்பங்களே கோவிற் தேர்களில் இடம்பெற்றன. ஆனல் சோடிச் சிங்கம், சோடிக்குதிரை ஆகியவற்றையும் சாஸ்திரரீதிக்குள் ஊுந்தகம் ஏற்படாவகையில் செய்து வழக்கத்தை மற்றவர்களும் கையாள முன் மாதிரியாக விளங்குகின்றன."

திரு. கந்தசாமி, அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் செயலாளர் திரு. த. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர்.

# அந்தோனியார் பெருநாள்

உடுப்பிட்டி, செவ்.

வதிரி அர்ச். அந்தோனியார் பெருநாள் வழமைப் பிரகாரம் இம்மாதம் 4-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 12-ம் திகதி இரவு வேஸ்பருடனும் மறுநாட்காலை பாடற்பூசையுடனும் சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடையும் மேற்படி ஆராதனைகளைவண. பிதா எல். அந்தோனிப்பிள்ளை நடாத்திவருகின்ருர்.






# துணைநூல்கள் எழுதுவோருக்கு ஊக்கமளிக்கத்திட்டம்

நல்லூர், செவ்வாய் பாடசாலை மாணவர்களுக்கு பயன்படத்தக்க பின்னணித் துணை நூல்கள் எழுதுவோருக்கு ஊக்கமளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. அவர்கள் எழுதும் நூல்களை அரசாங்க விலைக்கு வாங்குவதன் மூலம் ஊக்கமளிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வகையில் விஞ்ஞானக் கலை சார்பாக எழுதி வெளியிட்ட நூல்களில் வகைக்கு இரண்டாயிரம் பிரதிகளுக்கு கூடாமல் அதற்கென நியமித்த ஒரு சபையாரின் தகவுரையுடன் வாங்குவதற்கு அரசகரும மொழித்திணைக்களத்தார் முன்வந்துள்ளனர்.

அரச கரும மொழித்திணைக்களத்து வெளியீட்டுப் பிரிவினரும் கல்வித் திணைக்களத்தினரும் உவந்தனவெனத் தகவு கூறும் நூல்களின் பிரதிகளே வாங்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களின் வெளியீட்டாளருடனும், நூலாசிரியர்களுடனும் அரச கரும மொழித்திணைக்கள வெளியீட்டுப் பிரிவினர் பணம் கொடுப்பது பற்றி உடன்படிக்கை எழுதிக் கொள்வர். இப்பணம் அரசகரும மொழித் திணைக்களத்தாரால் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட நூலில் இரண்டாயிரம் பிரதிகளுக்குக் கூடாமல் அரசாங்க மொழித் திணைக்களக வெளியீட்டுப் பிரிவினர் வாங்குவர். கடந்த வருடம் ஜூன் 1-ம் திகதிக்குப் பின்னர் இவ்வாண்டு ஜூன் 30-ம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட நூல்களில் இரண்டு பிரதிகள் அரசகரும மொழி அலுவலக ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

## சுகாதார விழா

பருத்தித்துறை, செவ். சுகாதார விழாவையொட்டி அல்வாய், ஆத்தியடி, செம்பியன்பற்று, கரவெட்டி ஆகிய இடங்களில் இந்த வாரத்தில் பகிரங்கக் கூட்டங்கட்கு ஏற்பாடாகி இருக்கிறது.

இறுதி விழா இம்மாதம் 14-ம் திகதி வல்வெட்டித் துறைச் சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## சுகாதாரவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன் கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றுவரும் மக்கள் சுகாதார விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

காலை 9-00 க்கு சுகாதார பொருட்காட்சியை யாழ்ப்பாணம் கல்வி உதவி டைரக்டர் திரு. எஸ். தணிகாசலம் திறந்துவைப்பார். வலி கிழக்கு பட்டினசபை தலைவர் திரு. ஏ. வயித்திலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். சனசமூகநிலையங்களின் சங்கக் காரியதரிசி திரு டி. துரைசிங்கம் நன்றி உரை. 9-15க்கு பொருட்காட்சி பொதுமக்களுக்குதிறந்துவைக்கப்படும். 9-30 க்கு இரத்ததானம் ஆரம்பம். பகல் 2-00 தொடக்கம் 4-00 வரை ஆசிரியர்களின் சுகாதார கருத்தரங்கு இடம் பெறும். தலைவர்: ஏ. அருளையா. மாலை 5-15க்கு கரபந்தாட்டசுற்றுப்போட்டி; 6-00 மணிக்கு பொதுக்கூட்டம் திரு. ஜி. வி. பாலசிங்கம் ஜே. பி. தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் பி. கிருஷ்ணபிள்ளை, திருமதி சத்தியதேவி துரைசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். 6-45 க்கு சுகாதாரசேவை பகுதியினரின் திரைப்படக் காட்சி இடம்பெறும்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, செவ் உடுப்பிட்டி இமையாணன் வடக்கிலுள்ள ஜோதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. கே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. க. சின்னத்தம்பி. உப தலைவர்: திரு. ச. நாகேந்திரம். செயலாளர்: திரு. சி. சிவராசா. உப செயலாளர்: திரு. செ. தவராசா. பொருளாளர்: திரு. அ. ஆறுமுகம்.

## அணுவிஞ்ஞானியின் ஆராய்ச்சி பேருரை

யாழ்ப்பாணம், செவ். இலங்கை வானொலி ஆராய்ச்சிப் பகுதியில் கடமையாற்றுபவரும், பிரபல அணு விஞ்ஞானியுமான திரு. கே. கந்தையா, வட இலங்கை விஞ்ஞான ஆசிரியர் சங்கக் கூட்டத்தில், "விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உதவும் உபகரணங்கள்" என்னும் பொருள் பற்றி இம்மாதம் 20-ந் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆராய்ச்சி பேருரை யொன்று ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூபியுடன் நீதியரசர் பேச்சு

டல்லாஸ் (டெக்ஸாஸ்) ஜூன் 9 அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் கொலை சம்பந்தமாக ஜனாதிபதி ஜோன்ஸனினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் தலைவர் பிரதம நீதியரசர் ஏர்ல் வொறன், நேற்று டல்லாஸ் சிறைச்சாலையில் ரூபியைச் சந்தித்தார்.

ஜனாதிபதி கென்னடியைக் கொலைசெய்த ஒஸ்வோல்ட்டை சுட்டுக்கொலை செய்த குற்றத்துக்காக ரூபிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

புதன் (10-6-64)

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 7-15 குரலிசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 இடைவேளை, 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைகானம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேட்டி — சேர் வைத்திலிங்கம் துரைசாமி, 7-30 வயலின்— டி. வி. பிச்சையப்பா, 8-00 மாதர் மஜ்லிஸ், 9-45 சாஸ்திரீய சங்கீதம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-10, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல், 7-30 இசைக் கோவை.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 பெண்ணுலகம், 2-10 பாட்டு— கே. வி. காளிதாஸ்.

மாலை 5-15 வீணை — சிதம்பரம், ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-45 நாடகம்— 'போனகாரியம்', 8-00 திரைப்பட இசை, 8-45 குரலிசை— பி. லீலா, 9-20 பொன்னொளிர் பாரதம், 9-45 இசைமாலை — முசிரி சுப்பிரமணிய ஐயர், 10-00 வீணை.

# "மருந்துத்தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கவும்"

## மஹ்மூத்துக்கு நாகநாதன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன் "யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. தங்கள் மருந்துக் களஞ்சியப் பகுதியினரின் வன்னெஞ்சத் தனத்தாலும், மிலேச்சத்தனமான போக்கினாலும், நோயாளர் பிராணவஸ்தைக்குட் படுத்தப்படுகிறார்கள். உண்மையில் இப்போக்கு அநேகருடைய மரணத்துக்குக் காரணமாகிவிட்டது. சிங்கள மொழியில் கோரப்படாத எவ்வித மருந்து வகைகளையும் விநியோகிப்பதில்லை யென அடம்பிடிக்கும் மருந்துக்களஞ்சியப் பகுதி ஊழியர்க்கு உடனடியாகக் கடுந் தண்டனை விதிக்க வேண்டுகிறேன்."

இவ்வாறு நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நாகநாதன் சுகாதார அமைச்சர் திரு. பதியுதீன் மஹ்மூத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"இன்று வினஸ் டெக்ரேஸ், ஹைட்ரோ கொற்றிசின், அஸ்ப்றின், சபைன் ஊசி மருந்துகள்; குளிசைகள், வன்ஜக்ரில் ஊசி மருந்துகள்; குழிசைகள், டைலடின் சோடியம் கொப்பசில்ஸ் முதலான மருந்துகளுக்குத்தட்டுப்பாடு நிலவுவதுடன், மற்றும் மிகமிக இன்றியமையாதனவாகிய இருபது மருந்துகள் துப்புரவாகக்கிடையாதும் உள்ளன. மருந்துகள் கிடையாதிருப்பதும், அவற்றிற்குத் தட்டுப்பாடேற்படுவதும் தங்கள் அமைச்சுக்கே அவமானம். தங்களுக்கு சுயகௌரவமிருக்குமேல் தங்கள் பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டுகிறேன். இராஜினாமாச் செய்ய இயலாவிடில், இப்பாதகம் நடவாது தடுக்க, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலிருந்து பலகாலும் திரும்பவுந் திரும்பவுங் கேட்கப்பட்டகோரிக்கைளுக்குச் செவி கொடுக்காதிருந்துவரும் மருந்துக் களஞ்சியத் துஷ்டர்கள் பேரில் தகுந்த நடவடிக்கை எடுக்கவும்."

## விமானங்கள் மோதின

கான்னிஸ், ஜூன் 9 கான்னிஸ் கடற்கரைக்கு மேலாகப் பறந்த இரண்டு ஹெலிகாப்டர் விமானங்கள் நடுவானில் மோதிக்கொண்டதில் 2 பேர் உயரிழந்தனர். ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

இரு விமானங்களும் மோதிய பொழுது தீப்பற்றிக்கொண்டன. இவற்றில் ஒன்று தரையில் மோதியதும் பெரும் வெடிச்சத்தம் கேட்டது.

சர்வதேச விமான கண்காட்சியின் போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது.

## கோவில் நிதிக்காக நாடகம்

யாழ்ப்பாணம், செவ். ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விநாயகர் கோயில் நிதிக்காக அடுத்த மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் கொழும்பு புகைப்படக் கலைஞர் திரு. கிங்ஸ்லி. எஸ். செல்லையாவின் ஆனந்தா புரடக்ஷன்ஸாரின் 'மஞ்சள் குங்குமம்' நாடகம் நடைபெறவிருக்கிறது.

## திருக்கேதீச்சர ஆலய மகாசங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன் இவ்வருடம் திருக்கேதீச்சர ஆலய மகாசங்காபிஷேக விழா 29-6-64 திங்கட்கிழமை நடைபெறும்.

கௌரி அம்பாள் சமேத கேதீச்சரநாதருக்கு அன்று பகல் மகாசங்காபிஷேகமும் விசேட பூசையும் அடியார்களுக்கு அன்னதானமும், மாலை தேவாரபாராயணமும் சைவ பிரசங்கங்களும் இரவு சுவாமி அம்பாள் மணவாளக் கோல உற்சவமும் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
1001 Magic Thrills!!
Guy Williams
IN
Captain Sindbad
( Wondrascope - Technicolor )

## உள்நாட்டுத் தயாரிப்புகள்

"மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு" என்று கூப்பாடு போடுங் காலத்திலே சிறந்த உள்நாட்டுத் தயாரிப்புகளை உங்களுக்கு குறைந்தவிலையில் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 290

## தேவை

தேசியசுவீப் வீடுவீடாகவோ கூட்டங்கள் உள்ள இடங்களுக்கோ கொண்டு திரிந்து விற்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. ரூ.100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர் யாழ்ப்பாணம், தொலைபேசி: 461. 493.

## விற்பனைக்கு

33 சிறீ 737 இலக்கமுள்ள சிறந்த பெட்(f)போட் வேன் விற்பனைக்கு இருக்கின்றது. 'மாட்டின் லேணர்ஸ்' 35, முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள காரியாலயத்தில் சந்திக்கவும். 503

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம்சந்திக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் அரசடி ரோட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரம்: பொன்னுத்துரை விஜயரெத்தினம் 66, பலாலி வீதி, கந்தர்மடம். 500

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. கபிரியேல் ஓயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.
3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.
தயாரிப்பாளர்கள் :
கபிரியல்வைத்தியசாலை, சுன்னாகம்
GABRIELS, Chunnakam. 275

பெண்களைப் பழக்குவதற்கு பெண் கார்ச் சாரதி தேவை. லைசென்ஸ் உள்ளவர்களின் மனுக்கள் முதலில் கவனிக்கப்படும். இல்லாவிடில் பழக்கி லைசென்ஸ் எடுக்குமளவும் சம்பளம் கொடுபடமாட்டாது. நேர்முகப் பரீட்சை இல்லை. விண்ணப்பங்களை அனுப்பவும்: 'மாட்டின் லேணர்ஸ்' 35, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 502

யாழ்ப்பாணத்திலுள்ள நர்ஸிங் ஹோம் (Nursing-Home) ஒன்றிற்கு ஒரு நர்ஸ் மிட்வைவும் (Nurse-Midwife) இரண்டு நர்ஸ்மாகளும் (Nurses) தேவை. விண்ணப்பிக்கவும்: C/o ஈழநாடு. 490

### பண வசதி

அடகு நகைகள் மீட்டுக் கொடுக்கப்படும். பவுண் நகைகள் வாங்கப்பெறும். தேவையான நகைகள் அரைக் கூலியுடன் விற்கப்பெறும். கந்தசாமிச் செட்டியார், 123/3 அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 499

இப்பொழுது திரையிடப்படுகிறது !
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) ஜுப்பிட்டர் (குருணாகலை) தாஜ்மஹால் (கல்முனை)
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்

முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

# 'இரத்ததானம் மிகப் பெரும் சமூகத் தொண்டு'

## கோப்பாய் கூட்டத்தில் கல்லூரி அதிபர் பேச்சு

நல்லூர், புதன்

"இரத்ததானம் சிறந்த சமூகத் தொண்டு. மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் பிறருக்குச் செய்யக் கூடிய மிகப் பெரும் உதவியும் இதுவே" என்று கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியகலாசாலை அதிபர் திருமதி இ. ஆனந்தகுமாரசாமி நேற்றிரவு நடைபெற்ற இரத்ததானக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய் பகுதி சுகாதார வார விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்ததானப் பொதுக்கூட்டம் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி ஆனந்தக்குமாரசாமி தமது உரையில் கூறியதாவது:-

விஞ்ஞானத்தின் மூலம் பல செயற்கை மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மனிதனின் இரத்தத்தை செயற்கையாக உண்டுபண்ண முடியாமலிருப்பதனுல் தான் மனிதரை இரத்ததானம் செய்யும்படி கேட்க வேண்டியுள்ளது. சிறு பிள்ளைகளுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே இரத்ததானத்தின் பெருமையை உணர்த்த வேண்டும். அவர்கள் தகுந்த வயது அடைந்ததும் இரத்ததானம் செய்யப் பழகுவதுடன் அதனைத் தமது கடமையாகவும் கருதுவார்கள். இத்தகைய கடமையையே எதிர்காலமும் அவர்களிடம் எதிர்பார்க்கும்.

அறியாமை, மனப்பயம் என்பனவற்றுல் இரத்ததானம் செய்யச் சிலர் தயங்குகிருர்கள். இந்தத் தவருன மனப்போக்கை மாற்றும்வகையில் பிரசாரம் செய்யப்பட வேண்டும்.

எமக்கு ஏற்பட்ட ஒரு ஆபத்துக்கு இரத்த வங்கியில் இரத்தம் இல்லை என்று சொன்னவுடன் நாம் எவ்வளவு துயரமடைவோம் என்பதனை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். பணம் கொடுத்து எல்லோராலும் இரத்தம் வாங்கிவிட முடியாது. நாம் வழங்கும் ஒரு சிறுதுளி இரத்தம் ஒரு உயிரைக் காப்பாற்றப் பயன்படும்,

சுகாதாரக்கல்வியாளர் திரு. எஸ். பொன்னம்பலம் பேசியதாவது:-

விபத்துக்கள் ஏற்படும் போதும் பிரசவ காலங்களிலும் சத்திர சிகிச்சை செய்யும் வேளையிலும் அதிக இரத்தம் வெளி வருவதனுல் ஊசிமூலம் இரத்தம் புகட்ட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இழந்த இரத்தத்தை பூர்த்தியாக்குவதற்கு பழைய வைத்தியர்கள் மிருக இரத்தங்களை உட்செலுத்திப் பார்த்தார்கள். ஆனுல் அவை பயன்பட வில்லை. பின்பு மனித இரத்தத்தை கொடுக்கத் தொடங்கினுர்கள். அப்போதும் சிலருக்கு ஆபத்து ஏற்பட்டது. இதன் காரணத்தை 1901-ம் ஆண்டில் தான் வைத்திய நிபுணர் ஒருவர் கண்டு பிடித்தார். மனித இரத்தம் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 'ஏ' 'பி', 'ஏபி' 'ஓ' இப்பிரிவுகளில் எவருக்கும் இரத்தம் கொடுக்க வேண்டுமானுலும் அவரின் இரத்தத்திற்குச் சமமான இரத்தமே பொருந்தும். ஆகையினுல்தான் பலருடைய இரத்தங்களையும் எடுத்து அவற்றைப் பிரிவுகளாக பாகுபாடு செய்து வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பொதுநல நோக்கில்லா விட்டால் சுயநல நோக்குடன் பார்க்குமிடத்து எம்மில் எவருக்காவது, எமக்குத் தேவையான எவருக்காவது இரத்தம் தேவைப்படும் நிலை ஏற்படலாம். அப்போது இரத்த வங்கியில் இரத்தமில்லாது விட்டால் எமது கதி என்ன? இதனைச் சிந்தித்தாவது நாம் எல்லோரும் இரத்ததானம் செய்ய முன் வரவேண்டும்.

இரத்தத்தை எடுப்பதற்கு முன்னதாக சகல பரிசோதனைகளும் செய்யப்பட்டு, இரத்தம் கொடுக்கக்கூடிய உடல்நிலையில் உள்ளவர்களிடமிருந்து மாத்திரமே இரத்தம் எடுக்கப்படும். ஒருவர் தாம் கொடுத்த இரத்தம் சில நாட்களில இயற்கையிலேயே பூர்த்தியாக்கப்பட்டு விடுகின்றது. விசேஷ உணவுகளோ, அல்லது எவ்வித பாதுகாப்போ இதற்குத் தேவையில்லை. இது வைத்திய நிபுணர்கள் ஆராய்ந்து கண்ட முடிவாகும்.

எனவே பதினெட்டு வயதிற்கும் ஐம்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்ட ஆண் பெண் இருபாலாரும் வருகிற ஞாயிற்றுக்கிழமை வரை கோப்பாய் அரசினர் மகளிர் கல்லூரிக்கும், அதற்குப்பின் யாழ். ஆஸ்பத்திரிக்கும்சென்று தமது இரத்தத்தை தானம் செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மற்றும் பலர் பேசினர்.

---

அரிசி குத்தும்

# யந்திரத்தை திருத்த முயன்ற சிறுவன் அதற்கு பலியானுன்!

யாழ்ப்பாணம், செவ.

தகப்பன் இல்லாத சமயம் பழுதுபட்ட அரிசி குத்தும் யந்திரத்தைத் திருத்த முற்பட்டபோது நல்லதம்பி குமாரசாமி என்பவரின் 11-வயது மகனுன சிவகுமாரன் அதற்குள் சிக்குண்டு பரிதாபமான முறையில் மரணமானுன்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியிலுள்ள அரிசிகுத்தும் யந்திரத்தை தகப்பனுர் காலை 8 மணிக்கு இயங்கச்செய்துவிட்டு அடுத்த வீட்டிற்குச் சென்ற பொழுது, யந்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள 'பெல்ட்' கழன்று விட்டதால் அவரின் மகனுன சிவகுமாரன் யந்திரத்தை நிறுத்திவிட்டு 'பெல்ட்'டை போட முயற்சித்தபொழுது திடீரென இயந்திரம் இயங்கத்தொடங்கியதென்றும், இதனுல் யந்திர 'பெல்ட்'டுடன் ஏழு, எட்டுத்தடவைகள் சுற்றப்பட்டு மூளை சிதறி மரணமானுர் என்றும் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் நிகழ்ந்த போது அங்கே நின்ற மற்றொரு பையனுன ஏரம்பமூர்த்தி உடனே கூச்சலிட்டதாகவும், நமசிவாயம், திருநாவுக்கரசு என்பவர் ஓடிவந்து யந்திரத்தை நிறுத்தினுர்களென்றும் தெரியவருகிறது.

விபத்தினுல் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

---

## பிரதமருக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதென முடிவு செய்தால் திரு. சி. பி. டி' சில்வாவின் தலைமையில் புதிய கட்சி இம்மாதம் 22-ம் திகதி வரையில் ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

### இடதுசாரி முன்னணி நம்பிக்கை

திரு. சி. பி. டி' சில்வாவும் மற்றும் சிலரும் வெளியேறினுல் கூட்டு அரசாங்கத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி சேர வாய்ப்பிருக்கிறதென இடதுசாரி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

### கம்யூ. எம். பி, மிரட்டல்

கூட்டு அரசாங்கத்துக்கு கம்யூனிஸ்ட் ஆதரவு கொடுக்கவில்லையானுல் தாம் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி

---

## திருமண அழைப்பு

திரு. சரவணமுத்து அவர்களின் மகன் திருநிறை செல்வன் நமசிவாயம் (ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) அவர்களுக்கும் திரு. செ. ஆதிரெத்தினம் அவர்களின் மகள் திருநிறை செல்வி லீலாமணி (ஆசிரியை யாழ்ப்பாணம் கனகரத்தினம் ஸ்ரான்லி மத்திய மகாவித்தியாலயம்) அவர்களுக்கும் நிகழும் குரோதி வருடம் வைகாசி மாதம் 28ந் திகதி (10-6-64) இன்று புதன்கிழமை மாலை 6-30—7-30 வரும் சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தினருகாமையிலுள்ள மனேன்மணி அம்பாள் கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்தில் உறவினர்களையும் நண்பர்களையும் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிருேம்.

செ. ஆதிரெத்தினமும் பாரியாரும்

கோவில் வீதி,
நல்லூர். 504

---

## வேலைசெய்ய மறுப்பு

கொழும்பு, செவ்வாய்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வெரஹெர டிப்போவில் இன்று ஊழியர்கள் வேலைசெய்ய மறுத்துவிட்டனர். புதிய ஊழியர் ஒருவர் அதிக சம்பளத்துடன் வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டதே இதற்குக்காரணம்.

---

## இன்று

வில்லூன்றி விநாயகராலய தீர்த்தோற்சவம் காலை 10-மணிக்கு நடைபெறும். பகல் 11 மணிக்கு மகா பூரணுகுதியாக கும்பாபிஷேகம் இடம் பெறும். மாலை 7-மணிக்கு துவஜ அவரோகணம்.

★

வன்னேரிக்குளம் விநாயகர் ஆலயத்திற்கென செய்யப்பட்ட வீரவிநாயகப் பெருமானின் சாதுசங்கம் ஆசார முறைப் பிரதிஷ்டை இம்மாதம் 12-ந் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிச் சிவனடியார்கள் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள.

காலை 7 மணிக்கு இரட்டைக்கேணி அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகும் பாதயாத்திரை தம்பாகமம், வண்ணுங்கேணி, புதுக்காட்டுச் சந்தி வழியாக மருதங்கேணி கந்தசுவாமி ஆலயத்துக்கு மத்தியானம் 12 மணிக்கு வந்துசேரும். பின்னர் பி. ப 2-20 க்குப் புறப்பட்டு வத்தராயன், உடுத்துறை, மூள்ளியான் கிராமம், மண்டலாய் வழியாக பண்ணை வள்ளி வலம் விநாயகர் ஆயத்தை மாலை 6-30 மணிக்குச் சென்று சேரும்.

---

## யாழ்ப்பாணம் வரும் சென்னை அறிஞர்

நல்லூர், புதன்

சென்னையைச் சேர்ந்த தமிழ் அறிஞர் தமிழ்க்கடல் திரு. இராய.சொக்கலிங்கம் அடுத்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிருர்.

சுமார் பத்து தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கும் திரு. சொக்கலிங்கம் கரவெட்டி, தச்சன்தோப்பு விநாயகராலயத்தில் தொடர்ந்து சமயப் பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது.

---

## உலக சுகாதார தினம்

கொழும்பு, செவ்வாய்

இன்று உலக சுகாதார தினம் இலங்கையில் "க்ஷய ரோக எதிர்ப்பு" தினமாக இது அனுஷ்டிக்கப்படும்.

---

சமசமாஜக்கட்சியில் சேரப் போவதாக கோட்டே எம். பி. திரு. ஸ்டான்லி திலகரத்தின தெரிவித்துள்ளார்.

---


## திருமண அழைப்பு

நிகழும் குரோதி ஞு வைகாசி மீ 30-ம் நாள் (12-6-64) வெள்ளிக்கிழமை காலை 6-05—7-20 மணிக்குமிடையில்வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நிகழும்.

மணமகன்: திருநிறை செல்வன் சிவசிதம்பரம்
(ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம்)

மணமகள்: திருநிறை செல்வி தேவநாயகி

மங்கலநாண் பூட்டல்: காலை 6-05—7-20 மணமகளில்லம்.

மணமகன் இல்லத்தில் 14-6-64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேல் கொண்டாட்டம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்,

| மணமகனின் பெற்றோர் | மணமகளின் பெற்றோர் |
| --- | --- |
| அ. பொன்னம்பலமும், (இளைப்பாறிய கிராமாதிகாரி) பாரியாரும் | க. விசுவலிங்கமும் பாரியாரும். |

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.


---

# 'கடிதம்வரும் மொழியில் பதிலை அனுப்புக'

## நீர்ப்பாசன நிரந்தரக் காரியதரிசிஉத்தரவு

கொழும்பு, புதன்

சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டு வரும் கடிதங்களுக்கு அந்த மொழியிலேயே பதில் அனுப்பப்பட வேண்டுமென்று காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக்காரிய தரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா தமது அமைச்சுக்குக் கீழுள்ள சகல இலாகா தலைவர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

மூலப் பிரதி அரச கரும மொழியில் இருக்க வேண்டுமென்றும் ஆனுல் அதனுடன், எந்த மொழியில் கடிதம் வந்ததோ அதே மொழியில் பதில் அனுப்பப்படவேண்டுமென்றும் திரு. ஸ்ரீகந்தா கேட்டுள்ளார்.

அரச கரும மொழி சம்பந்தமான மந்திரிசபை முடிவுக்கிணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக திரு. ஸ்ரீகாந்தா தமது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## நேருஜிக்கு அனுதாபம்

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலிலிருந்து நேருவின் படத்தை ஏந்திக்கொண்டு சிதம்பராக் கல்லூரி சாரணர் இயக்கத்தினர் முன் செல்ல நெடியகாடு பிள்ளையார் கோயில்வரை மௌன ஊர்வலம் ஒன்று நேற்று நடைபெற்றது.

நேருஜிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நெடியகாடு முன்றலில் நடைபெற்ற கூட்டத்திற்கு நா. செல்வமாணிக்கம் தலைமைவகித்தார். பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில், ஜவஹர்லால்நேரு ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்து செல்வ மகனுக வளர்ந்து வந்தார். ஆங்கில நாட்டிலே கல்வி கற்ற இவர் ஆங்கிலேயனுகத் திகழ்ந்திருக்கலாம். ஆனுல் அவர் அதைப் பெரிதென மதியாமல் இந்திய நாட்டிற்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார் என்றும் இந்தியா அடிமையில் இருப்பதைக் கண்டு காந்திஜியோடு சுதந்திரத்திற்காக உழைத்து வெற்றியும் கண்டார் என்றும் நடுநிலைக் கொள்கையை நிலைநாட்டி உலக சமாதானத்திற்கரகப் பாடுபட்டார் என்றும் கூறினுர்.

பருத்தித்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. என். நடராசாவும் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினா.

---

## லெஸ்லி மறுத்தார்?

கொழும்பு, செவ்.

லங்கா சமசமாஜக கட்சியின் உயர்ந்த பதவியை ஏற்க திரு. லெஸ்லி குணவர்த்தன மறுத்துவிட்டாரெனத் தெரியவருகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டி, புதிய காரியதரிசியை தேர்ந்தெடுக்கும் பொருட்டு நேற்றுக் கூடியது. அச்சமயம் காரியதரிசிக்குரிய தேர்தலில் கலந்து கொள்ள திரு. லெஸ்லி குணவர்த்தன மறுத்துவிட்டாரெனத் தெரியவருகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியின் சட்டம் காரணமாக இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய கமிட்டி நேற்றுக் கூடவில்லை.

---


### காணவில்லை

மோட்டார் சைசிக்கிள் லைசன்ஸ் இல. D I 176337, C N 7215 சைசிக்கிளின் இன்சூரன்ஸ் பத்திரமும் ரக்சும் அடங்கிய பர்ஸ் காணுமல் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் செ. பாலச்சந்திரன், 3½, கேசாவில் ரோட், வண்ணூர்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு சேர்ப்பிக்கவும். 506

### தேவை

பிரிண்டிங், என்லார்ஜிங் முதலிய டாக்றூம் வேலைகளில் நல்ல அநுபவ முள்ளவர்கள் தேவை. அநுபவத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்பச் சம்பளம் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். செல்லம்ஸ் போட்டோகிராபர்ஸ். 94-96, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 505


---

## மரண அறிவித்தல்

### கே. வி. லிங்கம் ஜே. பீ.

குப்பிளான், புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்தவரும், மலேயாவிலுள்ள மீனுட்சி, திலகம், பரம்சோதி, கண்டி மகாமயாக் கல்லூரியைச் சேர்ந்த சண்முகவடிவு ஆகியோரின் தகப்பனுரும், மலேயாவிலிருந்த காலம்சென்ற ஏ. எஸ். ராஜா, மலேயாவில் இருக்கும் கே. வடிவேலு, கொழும்பு அசோசியேரெட் மோட்டார் வேக்ஸை சேர்ந்த செல்வராஜன் ஆகியோரின் மாமனுரும், பூனகரின் அப்போதிக்கரி குலசேகரத்தின் சகோதரனும், மலேயா கே. வி. நாதனின் மைத்துனருமாகிய மலேயா பென்சனியர் கே. வி. லிங்கம் ஜே. பி. ஜூன் 8-ந் திகதி காலமானுர். ஈமக்கிரியைகள் புதன் கிழமை 10-ந் திகதி மாலை 4-00 மணிக்கு நடைபெறும். 501

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.